Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 25 2024

புதன்கிழமை டிசெம்பர் 25, 2024 | ஒளி: 10 கதிர்: 122 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE








# அரிசி இறக்குமதி காலம் நீடிப்பு

அரிசி இறக்குமதி/கொள்முதலுக்கான அனுமதியை நீட்டிக்க அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தையில் அரிசி தட்டுப்பாடு காரணமாக, 12-09-2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி, இலங்கை அரச வர்த்தக (இதர) சட்டப்பூர்வ கூட்டுத்தாபனத்தினால் சுமார் 70,000 மெட்ரிக் தொன் அரிசி கொள்வனவு தற்போது நடைபெற்று வருகிறது.

மேலும், தனியார்த் துறை இறக்குமதியாளர்களும் டிசெம்பர் 20ஆம் திகதி வரை இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் தேவையில்லாமல் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் சந்தையில் அரிசி தட்டுப்பாடு 2025ஆம் ஆண்டு ஜனவரி இறுதி வரை தொடரும் என அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தனியார்த் துறை இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடு தேவையில்லாமல் அரிசியை இறக்குமதி செய்வதற்கான அனுமதி காலத்தை 01.10.2025 வரை நீட்டிக்க வர்த்தகம், வணிகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## ஜனாதிபதி அனுர, பிரதமர் ஹரிணி, சஜித் வாழ்த்து

இயேசு பிறப்புக்கு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்த நன்நாளைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது வாசகர்களுக்கும் தமிழ்மிரர் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் அகம் மகிழ்கின்றோம்.

முழுச் செய்தி P3



## “அரிசி விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது”



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியை விநியோகிக்கும் முறையில் சிக்கல்கள் இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதனை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தள்ளிவிட்டதால் தாய் மரணம்; மகன் கைது

வீட்டில் வளர்க்கும் நாய்க்கு கொடுத்த உணவு கெட்டுப்போனதால் தாயாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது மகன், தாயைத் தள்ளிவிட்டதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தாய், திங்கட்கிழமை (23) உயிரிழந்துள்ளதாக ராகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 389 கைதிகளுக்கு பொது மன்னிப்பு



நத்தார் தினமான இன்று புதன்கிழமை (25) நாடளாவிய ரீதியில் சுமார் 389 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் நால்வர் பெண் கைதிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இரண்டு சிறுத்தை குட்டிகள் மீட்பு

எஸ்.சதீஸ்

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோர்வூட் சென்ஜோன்டிலரி மேற்பிரிவு தோட்ட தேயிலை மலையில் இருந்து இரண்டு சிறுத்தைக் குட்டிகள் செவ்வாய்க்கிழமை (24) காலை மீட்கப்பட்டதாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி நிதியை முறைகேடு செய்தமை தொடர்பில் விசாரணை



ஜனாதிபதி நிதியை முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களம் (CID) அறிவுறுத்தியுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## புதிய இணையத்தள போர்டல் அறிமுகம்

இஸ்ரேலிய வேலைகளுக்கு விண்ணப்பித்த தொழிலாளர்களுக்குத் தகவல்களைப் பெற புதிய இணையதள போர்டல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆசிரியர்களுக்கான தடை தற்காலிகமாக இடை நிறுத்தம்

மேல் மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்குத் தனியார் கல்வி வகுப்புகளை நடத்துவதை மட்டுப்படுத்தி மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமையச் சுற்றறிக்கையை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

, மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் மாணவர்களுக்கான கட்டணக் கல்வி வகுப்புகளை நடாத்துவதற்குத் தடை விதித்து மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

தொடர்ச்சி P2

## யாழ். வர்த்தக நிலையங்களில் சுகாதார பரிசோதனை



பு.கஜிந்தன்

பண்டிகை காலத்தை முன்னிட்டு யாழ். பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதார பரிசோதனை நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (24) முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## குஷுடன் ரஷ்ய பிரஜை கைது

டி.கே.ஜி.கபில

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேறிய வெளிநாட்டவரைக் கைது செய்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று அவருடைய பயணப்பொதியை

தொடர்ச்சி P2

## கடற்றொழில் சட்டத்தை இரத்துச் செய்ய அங்கிகாரம்

கடந்த 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் சட்டம் இதுவரைக்கும் 08 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டத்தை இரத்துச் செய்து புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், இதுவரை குறித்த பணி பூர்த்தி செய்யப்படவில்லை.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆசிரியர்களுக்கான தடை தற்காலிகமாக...

சுற்றறிக்கை ஒன்றைக் கடந்த வெள்ளிக்கிழமை (20) வெளியிட்டிருந்தார். சுற்றறிக்கைக்கு ஆட்சேபனைகள் எழுந்ததையடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகத் தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

## குஷ்டன் ரஷ்ய பிரஜை கைது

சோதனையிட்டபோது, அதிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 'குஷ்' கைப்பற்றப்பட்டது.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 34 வயதான இவர் தகவல் தொழில்நுட்ப அதிகாரியாக பணியாற்றி வருகிறார். மேலும், அவர் இந்த குஷ் போதைப்பொருளைப் பயிரிட்டு, தயாரித்து, உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளில் விநியோகம் செய்பவர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர் கொண்டு வந்த சூட்கேஸில் கடற்பாசியால் செய்யப்பட்ட தலையணையில் மறைத்துவைக்கப் பட்ட 01 கிலோ 50 கிராம் குஷ் போதைப்பொருள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## கடற்றொழில் சட்டத்தை இரத்துச் செய்ய அங்கிகாரம்

எமது நாட்டின் உள்நாட்டு நீர்ப்பரப்புகள் மற்றும் ஆழ்கடலில் சட்டவிரோதமாக, பதிவு செய்யப்படாததும் ஒழுங்கு முறைப்படுத்தாததுமான மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சட்ட வாக்கத்தை

பலப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளும், சட்ட வரைஞர் திணைக்களம், சட்டமா அதிபர்

திணைக்களம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் கூடிய குழுவால் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய

சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இரண்டு சிறுத்தை குட்டிகள் மீட்பு

அந்த தேயிலை மலையில் ஆண் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த போது, இரண்டு குட்டிகள் இருப்பதைக் கண்டு தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர் இந்த இரண்டு குட்டிகள் தொடர்பாக நோர்வூட் பொலிஸார் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த இரண்டு குட்டிகளும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு குட்டிகளையும் தாய் சிறுத்தை திங்கட்கிழமை (23) ஈண்டு இருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிப்பதோடு மீட்ட இரண்டு சிறுத்தை குட்டிகளையும் அதே இடத்தில் வைக்குமாறு வனவிலங்கு அதிகாரிகள் குறித்த தேயிலை மலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அறிவித்ததாகத் தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இரண்டு குட்டிகளும் காணப்பட்ட பகுதியில் பெரிய சிறுத்தை ஒன்று அலைந்து திரிவதாகவும் அந்த பகுதிக்கு சென்று தொழில் புரிய முடியாத சூழ் நிலை காணப்படுவதாகத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இது தொடர்பாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சென்ஜோன் டிலரி மேற்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## "அரிசி விநியோகத்தில்...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது. இதன்போது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. சதொச மற்றும் அரச பல்நோக்குக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அரிசியை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாகத் தனியார்த் துறையினருக்கும் அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசு எதிர்பார்த்த தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்றாலும், அரிசியை விநியோகிக்கும் முறையில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அரச தலையீட்டுடன் விரைவாக அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அரிசியை நுகர்வோர் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தனியார்த் துறையில் அரசாங்கத்தால் நேரடியான சில தலையீடுகளை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது. இறக்குமதிக்கான கால எல்லை ஜனவரி 10வரை நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதியில் எதிர்பார்த்த அளவான அரிசி சந்தையில் கிடைக்கப்பெறும். மக்களுக்கு உரிய முறையில் அரிசியைப் பெற்றுக்கொடுக்கும் அதேவேளை, உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாப்பதும் அவசியமாகும். இந்த இரண்டையும் கையாளும் நோக்கில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமையும்" என்றார்.

## யாழ். வர்த்தக நிலையங்களில் சுகாதார பரிசோதனை

28 உணவகங்கள் மற்றும் இதர வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கலாக 28 வர்த்தக நிலையங்களில் இந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில், 11 கடைகளில் குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. அந்த வர்த்தக நிலையங்களில் வியாபாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த 9 வகையான உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன. அத்துடன் நான்கு கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில், சுகாதார வைத்திய அதிகாரி, தொற்று நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி, தாய் சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த களத்தரிசிப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தள்ளிவிட்டதால் தாய் மரணம்; மகன் கைது

ராகம வல்பொல பிரதேசத்தைச் சேர்ந்த தீபா மாலா குமாரி விஜேசிங்க (வயது 57) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் அந்த தாயின் மகன் (24) சந்தேகத்தில் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய்க்கு கடந்த (20) ஆம் திகதி கொடுக்கப்பட்ட உணவு கெட்டுப்போனமை தொடர்பில் தாய்க்கும் மகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, தாயை மகன் தள்ளிவிட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

படுகாயமடைந்த தாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை (23) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட பிரேதப் பரிசோதனையில் தள்ளியதால் கீழே விழுந்த காரணமாக ஏற்பட்ட காயங்களினால் மரணம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## ஜனாதிபதி நிதியை முறைகேடு செய்தமை தொடர்பில் விசாரணை

ஜனாதிபதி நிதியைத் துஷ்பிரயோகம் செய்த நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை (23) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொது நிதியைப் பாதுகாப்பதற்கான சட்டத்தரணிகளால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய இணையத்தள போர்டல் அறிமுகம்

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து இஸ்ரேலிய வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வசதிக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தையும் தாமதத்தையும் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இஸ்ரேலிய வேலைகளுக்கு விண்ணப்பித்த தொழிலாளர்கள் இந்த இணைய தளத்தின் மூலம் தங்கள் தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது,

மேலும் வேலைக்கு விண்ணப்பித்த பிறகு, அவர்களின் அடுத்த கட்டம் மற்றும் விண்ணப்பதாரரின் நிலை, விண்ணப்பதாரருக்குத் தெரிந்துகொள்ளும் திறன் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அலைபேசி, கணினி அல்லது www.slbfe.lk என்ற இணையத்தளத்தை அணுகி ஆட்சேர்ப்பின் கீழ் இஸ்ரேல் போர்ட்டலைத் தேர்ந்தெடுத்து தேசிய அடையாள இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் பிற தொடர்புடைய தரவுகளை உள்ளிட முடியும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னேற்பாடு...


கிறிஸ்தவ மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான நத்தார் பண்டிகையை உலக வாழ் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடுகின்றனர். அதனை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகர மத்திய பகுதிகளில் இயேசுபாலன் கூடில்கள், சைபிரஸ் மரக்கிளைகள், புத்தாடைகள், பட்டாசுகள், அலங்காரப் பொருட்கள் என்பவற்றை மக்கள், திங்கட்கிழமை (24) கொள்வனவு செய்தனர்.

–பு.கஜிந்தன்























## “நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்”



பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் இயேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை தற்பொழுது உண்மையாக்க அரசாங்கமென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ”அர்த்தமுள்ளதாக கொண்டாடுவோம்”



நத்தாரின் உண்மையான அர்த்தமான ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் சமாதானம் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கி நத்தாரை மகிழ்ச்சி மற்றும் அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவோம் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தேசமாக மீளக் கட்டியெழுப்பும் இந்த மறுமலர்ச்சி யுகத்தில் தமது குடும்பம் மற்றும் அன்புக்குரியவர்களுடன் காலத்தைச் செலவிடுவது மிகவும் முக்கியமானது. ஒற்றுமையுடன் செயற்படுதல், பகிர்ந்து வாழுதல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் ஊடாக எமது உறவுகளும் வலுவானதாக முன்னேற்றமடையும்.

ஆரோக்கியமான மக்கள் சமூகம் மற்றும் பலமிக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியானது வீட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதை இதுபோன்ற கூட்டு முயற்சிகள் எமக்கு நினைவூட்டும்.

உள்நாட்டில் உட்பட வெளிநாட்டில் சேவையாற்றுபவர்களையும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட பண்டிகை காலத்தில் தமது அன்புக்குரியவர்களுடன் காலத்தைச் செலவிட முடியாத அனைவரையும் இந்த தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

உலகம் முழுவதும் காணப்படும் யுத்த சூழல் காரணமாக சிறுவர்களும் மரணிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு மத்தியில் நாம் நமது உள்ளங்களில் அமைதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். குடும்பம், சமூகம் மற்றும் உலகம் என்ற அடிப்படையில் மன்னிப்பு வழங்குதல் மற்றும் ஐக்கியத்துடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நத்தார் பண்டிகை எமக்கு நினைவூட்டுகிறது.

அத்துடன் இந்த பண்டிகை காலத்தில் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கி மகிழ்ச்சியுடன் அதனைக் கொண்டாடுவதில் அவதானத்துடன் இருக்க வேண்டும். நமக்கு மாத்திரமன்றி, ஏனையவர்களின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு சரியான தெரிவுகளை மேற்கொள்ளுங்கள்.

இந்த காலத்தில் பரஸ்பர உறவுகளைக் கட்டியெழுப்பவும், பொறுமையை வளர்த்துக்கொள்ளவும், ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 17 இந்திய

# மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 17 இந்திய மீனவர்களை செவ்வாய்க்கிழமை(24) அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதற்கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதற்கமைய, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் விசாரணையின் பின்னர் செவ்வாய்க்கிழமை(24) மதியம் 1 மணியளவில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் 17 சந்தேக நபர்களையும் ஆஜர்படுத்திய நிலையில், 17 மீனவர்களையும் எதிர்வரும் 7 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத இழுவை மடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இரண்டு ரோலர் படகுகள் உட்பட அதில் மீன்பிடியில் ஈடுபட்ட 17 மீனவர்களையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.





ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து திங்கட்கிழமை(23) அன்று 400க்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று கடலுக்குச் சென்றுள்ளது.

பின்னர் இரவு 12.30 மணி அளவில் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினரால் 17 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டதால், தங்கச்சிமடம் கிராமத்தில் இந்த ஆண்டு கிறிஸ்மஸ் கருப்பு கிறிஸ்மஸ் ஆக மாறி விட்டதாகவும் கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து, தாயகம் அழைத்து வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர்களின் உறவினர்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## “மக்களின் காணிகள் அவர்களுக்கே உரித்தானது”




எஸ்.கீதபொன்கலன்

பொது மக்களின் காணிகள் அவர்களுக்கே உரித்தானது. அதை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அரசு என்ற வகையில் வழங்க வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்கவே நாம் உழைக்கின்றோம். நாடு பூராகவும் உள்ள அரச காணிகள் தொடர்பில், அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பில் இருக்கக்கூடிய அனைத்து தடைகளையும் நீக்கி திருகோணமலை உட்பட அனைத்து பகுதிகளிலும் ஒரு சீரான காணி வழங்கல் நடைமுறையை ஏற்படுத்த உள்ளோம் என்று செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற முதலாவது திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும்,வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா கூறியுள்ளார்.

## பிரத்தியேக செயலாளராக கலாநிதி சிவப்பிரகாசம் நியமனம்

வி.ரி.சகாதேவராஜா

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் ஆலோசகருமான கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமை ஆய்வாளரும், சிறந்த கல்விமானும், தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசிய குழு உறுப்பினருமான கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் நாடளாவிய ரீதியில் அளப்பரிய சேவையாற்றி வரும் மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் ஸ்தாபகராவார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் எஸ். பிரதீப், கலாநிதி சிவப்பிரகாசத்திற்கான நியமன பத்திரத்தை வழங்கி வைத்தார்.



இவர், தேசிய மக்கள் சக்தியின் மலையக மக்கள் சம்பந்தமான கொள்கை திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகித்தவர்.

அத்துடன், மலையக மக்களின் மாற்றத்திற்காக மிகுந்த பங்களிப்பு செய்தவர்.

இவரது நியமனம் எதிர்காலத்திலே மலையக மக்களுக்கான அபிவிருத்தியில் சிறந்த மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## “அனைவரும் ஒன்றிணைவோம்”



நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்வோம். நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள நத்தார்தின வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாகப் புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளது. இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயம் சார்ந்த சமூகத்திற்கு நம்பகமான அடித்தளத்தை அமைத்தது. அன்று இயேசு நாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய நமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது.

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகவும் உள்ளது. இதன் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும். இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்குப் பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## “மகிழ்ச்சிகரமான ஒரு நன்நாளாகும்”



இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் தொடர்புடைய நத்தார் பண்டிகையானது, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் மாத்திரமன்றி முழு மானிட சமூகத்துக்கிடையில் பிரிக்க முடியாத தொடர்புகளைப் பலப்படுத்துகின்ற மகிழ்ச்சிகரமான ஒரு நன்நாளாகுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தின் நல்வாழ்வைப் போன்று, பாவத்தின் இருளை அகற்றுவதே இயேசு கிறிஸ்து போதித்த உன்னத செய்தியாகும். சமாதானம், கருணை, இரக்கம் போன்ற வழிகாட்டல்களின் மூலம் தவறான புரிதலை நீக்கப்பெற்ற சுபிட்சமான வாழ்க்கை நெறிக்கு இந்தப் போதனைகள் வழிகாட்டுகின்றன.

மானிட சமூகம், ஒவ்வொருவர் மீதும் இரக்கக் குணத்துடனும் அன்புடனும் வாழ்தல் மற்றும் சமுதாயத்தில் அல்லலுறும் மக்களுக்கு ஆதரவளித்தல் மூலம் இறைவனின் அன்பை உண்மையாகவே ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் கண்டுகொள்ள முடியும் என்பதை இயேசு கிறிஸ்து போதித்தார்.

சமூக ரீதியாக நத்தாருடன் ஒன்றிணைந்த கலாசாரம், ஒரு மகிழ்ச்சியான தருணமாகவும், நட்புணர்வின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது. அதனால், நத்தார் கலாசார விழுமியங்கள், இன, மத பேதமின்றியும் வயது வேறுபாடின்றியும் உற்சாகமூட்டுகின்றன.

எனவே நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தி கிடைக்கட்டும். உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துகள் என தெரிவித்துள்ளார்

## “ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கவேண்டும்”



விண்ணுலக தேவன் மண்ணுலகில் அவதரித்து, பாவங்கள் போக்கிட பாரினில் வந்துதித்த இயேசு பாலகன் பிறந்த நன்னாள் இந்நாளாகும். இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் மலர்ந்த இவ் நத்தார் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இறை மகன் இயேசு மனிதராய் அவதரித்த இப்புனித நாளில் பல காலமாக எம் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட இனவாதம், மதவாதம், அற்ற அனைத்து இலங்கையரதும் மனங்களை வென்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வின் எதிர்பார்ப்பு, வளமான நாடு அழகான வாழ்க்கையினை கட்டி எழுப்புவதாகும், வளமிக்க நாடாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றால் நாம் இறைமகன் போதித்த அன்பு, பணிவு சகோதரத்துவம், பகிர்ந்து வாழ்தல் என்னும் உயரிய நெறிகளை வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலமே, நாம் இலங்கையர் என்ற ரீதியில் எமது இலக்கை அடைய முடியும், ஒருவருக்கொருவர் பகைமையும், காழ்ப்புணர்ச்சி, அரசியல் சூழ்ச்சிகளை நீக்கி, இறைமகன் இயேசு போதித்தது போல “நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டும்” என்ற கட்டளைக்கு இணங்க ஒருவரில் ஒருவர் அன்பாயிருந்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வில் எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் பெற்று அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ வாழ்த்துகின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 154 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்





சிவா ஸ்ரீதரராவ்



சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 154 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில், சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்றது.

இலங்கையின் ஆசிரியர் சேவைக்கு சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வருடம் (07.04.2024) நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் , இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சாந்த பத்மகுமார, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ஷ, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புஷ்பகுமார திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் தர்ஷினி இந்தமல்கொட உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# விடுதியில் உயிரை மாய்த்த குடும்பஸ்தர்

வி.ரி.சகாதேவராஜா

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள விடுதி அறையிலுள்ள மலசலக் கூடத்தில் தனது உயிரை மாய்த்துக் கொண்ட நிலையில் சடலமொன்று திங்கட்கிழமை (23) மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த பெரிய நீலாவணை 02 செல்லத்துரை வீதியைச் சேர்ந்த 54 வயது மதிக்கத்தக்க பூசாரி சந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம், பிரேதப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் திங்கட்கிழமை (23) மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# மனித இனத்துக்கு கிடைத்த மாபெரும் அதிசயமான நன்நாள்

ஒவ்வொரிடத்திலும் தொற்றிக்கொள்ளும் ஏதோவொரு தீய பழக்கம், வழக்கமாகி விடும். அதிலிருந்து பலரும் விடுபட்டுக் கொள்வர். இன்னும் சிலர் மீண்டெழ முடியாமல் மூழ்கி விடுவர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானவர்கள், இன்றிலிருந்து விட்டு விடுவேன் என சபதம் எடுத்துக் கொள்வர். இன்றைய நாளிலும்கூட சபதமெடுப்பர்.

பிறந்த நாள், வருடப்பிறப்பு, இயேசு கிறிஸ்து பிறந்திருக்கும் நன்நாளில் கூட சபதமெடுப்பதைப் பலரும் விரும்புவர். ஒவ்வொரு குடும்பங்களிலும் பிறக்கும் குழந்தைகள் அந்தந்த குடும்பங்களுக்குக் கிடைக்கும் ஓர் அதிசயம். ஆனால், பாலகன் இயேசுவின் பிறப்பு மனித இனத்துக்கே கிடைத்த மாபெரும் அதிசயமாகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை.

இரண்டொரு வருடங்களாக இன்றைய நன்நாளை, குடும்பத்தாருடன் வெளியில் சென்று மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடி மகிழமுடியாத சூழல் நிலவியிருந்தது. அதன் தாக்கம் இன்னும் நம்மையெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தாலும், மிகக் கவனமாக, வெளியில் சென்று திரும்புவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிலவற்றை எளிதில் மறந்துவிடலாம். மனிதர்களிலும் பலர் மறக்கப்பட்டுவிடுவார்கள், சம்பவங்களும் மறக்கப்பட்டுவிடும். ஆனால், கொரோனா வைரஸ் வரலாற்றிலேயே மறக்க முடியாத அளவுக்கு மக்களின் மனங்களில் பதிந்துள்ளது. மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

பரிசுப்பொருட்களைக் கொடுத்து, விருந்துபசாரம் உண்டுமகிழ்ந்த காலம் மலையேறியிருந்தது. அவையெல்லாம் கொஞ்சம், கொஞ்சமாக வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில், எங்குச் சென்றாலும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவதன் ஊடாக, அடுத்தடுத்த பிறழ்வுகளில் இருந்து தம்மையும் மற்றவர்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

வரலாற்றில் வலம் வந்த எத்தனையோ பேர் இம்மண்ணிலிருந்து மறைந்து விட்டார்கள் ஏன்? மனித மனங்களிலிருந்தும் மறைந்து விட்டார்கள். ஆனால், உலகிற்கு ஒளியாக, வாழ்வுக்கு வழியாக, உண்மைக்குச் சான்றாக, கன்னிமரியின் மகனாக இம்மண்ணில் பிறந்த இயேசு இன்றும் இம்மண்ணில், மனித மனங்களில் வாழ்ந்து வருகிறார்.

இந்த நன்நாளிலில் தான் அமைதியும் சமாதானம் விதைக்கப்பட்டது. ஆனால், உலகில் பல இடங்களில் இவ்விரண்டையும் தேடிக்கொண்டிருக்கின்றனர். எவ்வளவு விலை கொடுத்தாலும் இவ்விரண்டையும் வாங்க முடியாது. ஆனால், மனித உள்ளங்களில் தோன்றி, ஆழமாய் அடிக்கப்பட்டிருக்கும் தீய எண்ணங்கள் எனும் ஆணியை பிடுங்கியெடுத்து எறிவதன் ஊடாக, அமைதி, சமாதானத்தை இலகுவில் வென்றெடுத்து விடலாம்.

எல்லாமே, மனிதர்களின் மனங்களில்தான் இருக்கிறது.

மனித உள்ளங்களில் தோன்றிய தீய எண்ணங்கள் ஒழிக்கப் பட்டு அமைதியும், சமாதானமும் விதைக்கப்பட்ட இந்நாளில் நாமெல்லாம் உறுதிப்பூண்டுக் கொள்வோமாயின் உலக சமாதானம் வெகு தொலைவில் இல்லை. அவையெல்லாம் எமது எண்ணங்களிலேயே இருக்கிறது என்பதை நினைவூட்டுகின்றோம்.

உலக நாடுகள் பலவற்றுக்கு இடையில், ஏற்பட்டிருக்கும் மோதல்கள், யுத்தம் இவையெல்லாம் அடியோடு ஒழிக்கப்பட்டு, உலகின் சமாதானம் மலரவேண்டுமெனப் பாலகன் அவதரித்த இந்நாளிலாவது உறுதிப்பூண்டு பிரார்த்தனை செய்வோமாக.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்



எதுவும் கிடைக்கும் என்றோ, அல்லது எதுவுமே கிடைக்காது என்றோ மனதைப் பலவீனப்படுத்தக் கூடாது.

வெற்றிகளை நோக்கிப் பயணிக்கும்போது, சந்தேகம் வரவே கூடாது, அச்சமும் கூடாது. எங்களை நாங்களே பலப்படுத்த வேண்டும்.

சாதாரண விடயங்களைக் கூட, பதற்றத்துடன் செய்யும் நபர்கள் உண்டு. இதனால் வருவது குழப்பம்தான். பரீட்சைக்குப் போகின்றவர்கள் திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் செல்ல வேண்டும்.

எந்த நேரமும் எவரது பேச்சையும் காதில் வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதேபோல, பரீட்சை முடிந்த பின்னர், சாவகமாகவே திருப்தி நிலையில் செல்லுங்கள். தொடர்ந்தும் உங்கள் பாடங்களை மீண்டும் மீட்டி, மீட்டிப் படிக்கவும். எதிர்மறையாகப் பேசுபவர்களின் பேச்சுகளைக் கண்டுகொள்ளக் கூடாது. மனம் நுட்பமானது. அதைச் சிறந்த முறையில் நேரியைச் சிந்தனைக்குள் உட்படுத்த வேண்டும். எங்களை மிஞ்சி எதுவும் நடக்காது என்பதை உறுதி பூணுக. எமக்கான காலங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவோம்.

முன்னேற்றங்கள் ஒருவருக்கும் மட்டும் சொந்தமானது இல்லை. அது பொதுவானது. இதை உணருங்கள்; மேன்மை பெறுங்கள்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# 13ஆவது திருத்தத்தை மோடி மறந்ததேன்?



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த வாரம் தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சீனாவுக்கு அடுத்த மாதம் விஜயம் செய்யவுள்ளார். இது ஒரு வகையில் ஜனாதிபதி, அவரது வெளிநாட்டுக் கொள்கையைச் சமநிலைப்படுத்திக் காட்டுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே பலர் கருதுகின்றனர்.

இது ஒரு வகையில் சிறுபிள்ளைத் தனமான வாதமாகவும் தெரிகிறது. ஒரு நாட்டின் தலைவர் மற்றொரு நாட்டுக்கு விஜயம் செய்வதானது ஏனைய நாடுகளைப் புறக்கணித்ததாக அர்த்தம் கொள்ள முடியாது.

ஜனாதிபதி அனுரகுமார இந்தியாவுக்கு விஜயம் செய்தால் அதன் அர்த்தம் அவர் சீனாவைப் புறக்கணித்ததாகவோ, இந்தியாவின் பக்கத்தைச் சார்ந்து செயல்படப் போகிறார் என்பதோ அல்ல. எனவே, இந்திய விஜயத்தை சமநிலைப்படுத்தவே அவர் சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று வாதிடுவது அவ்வளவு ஏற்புடையதாகத் தெரியவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற வகையில் அனுரகுமார இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

ஆயினும், அவர் சீனாவுக்குச் செல்லவில்லை. அதனால் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையிலான உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த விடயத்தை நாம் ஆரம்பத்தில் கூறினாலும் இன்று நாம் ஆராயப் போவது அந்த விடயத்தை அல்ல. ஜனாதிபதியின் இந்திய விஜயம் எந்த அளவுக்குத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக வட மாகாண மக்களுக்கு முக்கியத்துவம் பெற்றது என்பதைச் சற்று அலச வேண்டியுள்ளது.

பொதுவாகப் பேசுவதாக இருந்தால் அனுரகுமாரவின் இந்திய விஜயமானது தமிழ் மக்களுக்கு அல்லது தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது. அது அவரது குற்றம் அல்ல.

இந்தியாவின் நிலைப்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாகும். கடந்த வருடம் அப்போதைய ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது இடம்பெற்றவற்றோடு, அனுரகுமாரவின் விஜயத்தின் போது, இடம்பெற்றவற்றை மொத்தமாக எடுத்துக் கொண்டால் இந்தியாவின் இந்த மாற்றம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ரணில் விக்ரமசிங்கவின் விஜயத்தின் போது, இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினையையும் வட மாகாண மீனவர்களின் பிரச்சினையையும் முற்றாகவே மறந்ததைப் போல் தான் நடந்து கொண்டது.

அவரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் வெளியிட்ட கூட்டறிக்கையில் இந்த இரண்டு பிரச்சினைகளும் இடம்பெறவே இல்லை. இரு தலைவர்களும் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் மோடி, இனப் பிரச்சினையைப் பற்றி மட்டும் ஓரிரு வார்த்தைகளைப் பேசினார்.

ஜனாதிபதி அனுரகுமாரவின் விஜயத்தின் போதும், கூட்டறிக்கையில் இனப் பிரச்சினை குறிப்பிடப்படவில்லை.

ரணிலின் விஜயத்தின் போது, இடம்பெற்றதைப் போலவே இரு தலைவர்களின் ஊடகவியலாளர் மாநாட்டில் மோடி மட்டும் அதைப் பற்றிப் பேசினார். அதுவும் மறைமுகமாகவே அதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், மீனவர்களின் பிரச்சினை கூட்டறிக்கையில் தனியானதொரு தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

மீனவர்களின் பிரச்சினையைப் பற்றிய குறிப்பில் "இரு நாடுகளிலும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அப்பிரச்சினையை மனிதாபிமான முறையில் தீர்ப்பதற்கான அவசியத்தைப் பற்றி இரு தலைவர்களும் இணக்கம் கண்டனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தில் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்லஸ் தேவாநந்தா அதைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், மனிதாபிமான முறையில் தீர்ப்பது என்றால் என்ன என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து வட மாகாண மீனவர்களின் கடல் வளத்தைத் திருடுவது இன்று நேற்று ஆரம்பித்த ஒன்றல்ல. 1960களில் வெளியான தமிழ் பத்திரிகைகளிலும் இந்தப் பிரச்சினை குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்காலத்திலும், இந்திய அதிகாரிகள் இலங்கைக் கடலுக்குள் பிரவேசிக்க வேண்டாம் என தமிழ் நாட்டு மீனவர்களை எச்சரித்துள்ளனர். இப்போது, தமிழ்நாட்டு அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அந்நாட்டு மீனவர்களை இந்த விடயத்தில் ஊக்குவிக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போர் நடைபெற்ற காலத்தில் இலங்கை மீனவர்களுக்குக் கடற்படையினர் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். மீனவப் படகுகளுடன் சேர்ந்து புலிகள் இலங்கைக்குள் ஆயுதம் மற்றும் போருக்குத் தேவையான ஏனைய பொருட்களைக் கடத்தி வந்தமையே இதற்குக் காரணமாகியது.

எனவே, அக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடலில் மீன் வளம் அதிகரித்தது.

இந்த நிலைமையைப் பாவித்து இந்திய மீனவர்கள் பெருமளவில் அவ்வளங்களை சூறையாடினர். அப்போது, கடற்படையினர் அவர்களைக் கைது செய்தும் சிலவேளைகளில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் வந்தனர்.

தமிழக தலைவர்கள் இதைப் பற்றி அடிக்கடி முறையிட்டனர். அறிக்கை வெளியிட்டனர். அத்தலைவர்கள் அக்காலத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களைப் பற்றியும் பரிந்து பேசியதால் இலங்கைத் தமிழ் தலைவர்களும் வட மாகாண மீனவர்களும் இந்திய மீனவர்களின் இந்த கடற்கொள்ளையைக் கண்டுகொள்ளவில்லை. கடற்படையினரைக் குறை கூறுவதையே அவர்களும் விரும்பினர்.

அண்மைக்காலமாக இதில் மற்றொரு பிரச்சினையும் இணைந்துள்ளது. அதாவது இந்திய மீனவர்கள் இலங்கை கடலில் மீன்வளம் அருகிப் போகும் வகையில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைக் கையாள்வதேயாகும்.

இரு நாட்டு மீனவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்று மேற்படி கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலுக்குள் பிரவேசித்து இந்திய மீனவர்களின் வளங்களைக் கொள்ளையடிப்பதாகப் பெரிதாக செய்திகளோ குற்றச்சாட்டுக்களோ காண்பதற்கில்லை. இந்திய மீனவர்கள் இலங்கை கடலில் அத்துமீறிப் பிரவேசிப்பதே பிரச்சினையாக உள்ளது.

இந்திய மீனவர்களின் இந்த கொள்ளையை மனிதாபிமான முறையில் அணுக வேண்டும் என்பதே இந்தியத் தரப்பினரின் வாதமாக உள்ளது. கடந்த காலங்களில் இப் பிரச்சினையைப் பற்றி இரு நாடுகளின் மீனவர்களும் அதிகாரிகளும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் இந்திய மீனவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் இலங்கை கடலில் மீன் பிடிக்க இடமளிக்க வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

இது மனிதாபிமான பிரச்சினை என்பதை விட சட்டப் பிரச்சினையாகவே அணுக வேண்டியுள்ளது. இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களுக்குரிய கடல் வளத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்.

அதை நிறுத்த வேண்டும். அதுவே, இதற்கான தீர்வாகும். இந்தியா பலம் வாய்ந்த நாடு என்பதாலும் குறிப்பாக இப்போது இலங்கை இந்தியாவின் தயவால் தமது பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்வதாலும் இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் முட்டி, மோத விரும்பவில்லை. இந்திய மீனவர்களும் தமிழக அரசியல்வாதிகளும் இந்திய அதிகாரிகளும் அந்த நிலைமையைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

அடுத்ததாக, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றி சம்பந்தப்பட்ட எவருமே குறிப்பிடவில்லை. அத்திருத்தம் 1987இல் நிறைவேற்றப்பட்டது முதல் முதன் முறையாகவே இடம்பெற்றுள்ளது. கடந்த வருடம் வரை இரு நாட்டுத் தலைவர்கள் உத்தியோகப்பூர்வமாகச் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த விடயம் இந்தியத் தலைவர்களால் மிக அழுத்தமாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

2019 நவம்பர் 18ஆம் திகதி கோட்டாபய ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதற்கு மறுநாளே இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட செய்தி ஒன்றுடன் இலங்கைக்கு வந்தார். அப்போது அவர் 13 ஆவது திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்குவதை வலியுறுத்திப் பேசினார். அதே மாதம் கோட்டாபய இந்தியாவுக்குச் சென்றார்.

அப்போது, ஜெய்சங்கர் மற்றும் மோடி ஆகிய இருவருமே இவ்விடயத்தை வலியுறுத்திப் பேசினார்.

2020 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி இந்தியப் பிரதமர் மோடியும் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இணைய வழியாக உயர் மட்ட பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டனர். அப்போதும் மோடி இந்த விடயத்தை மிக அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

2021 ஜனவரி 6ஆம் திகதி ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்த போது வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார். அதில் உரையாற்றிய ஜெய்சங்கர் இலங்கை தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது இலங்கையின் நலனுக்கே உகந்ததாகும் என்றும் எனவே அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்.

கடந்த வருடம் ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்குச் சென்றபோது, மேலே கூறப்பட்டதைப் போல் கூட்டறிக்கையில், இவ்விடயம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மோடி 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுமாறு கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் அதன் பெயரைக் குறிப்பிட்டே வலியுறுத்தினார். ஆனால் இம்முறையும் அவர் அனுர உடனான கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் அதைக் குறிப்பிட்டாலும் அதைப் பெயர் குறிப்பிட்டுக் கூறவில்லை. இலங்கை அரசாங்கம் அரசியலமைப்பை பூரணமாக நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாகவே அவர் கூறினார்.

அவர் 13ஆவது திருத்தத்தைத் தான் குறிப்பிட்டார் என்பது உண்மை. ஆயினும், அவர் ஏன் பெயர் குறிப்பிட்டு அக்கருத்தைக் கூறவில்லை என்ற கேள்வி எழுகிறது. ஏற்கனவே இந்தியா, வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு என்ற விடயத்தைக் கைவிட்டது. இப்போது 13ஆவது திருத்தத்தை மறைக்கிறது. இந்தியா, தமிழர் பிரச்சினையை தமது பொருளாதார மற்றும் இராஜதந்திர நலனுக்காகப் பயன்படுத்துகிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

## கடிதங்கள்

### கட்டாக்காலிகளால் பாரிய சிரமம்



அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது மற்றும் நகரப்பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்கள் உலா வருகின்றன.

இதன் காரணமாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்னுள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு, பல நாய்கள் பொலிஸ் நிலையம் செல்லும் வாசல் மற்றும் வீதியில் படுத்துறங்குகின்றன.

மேலும், மாலைப் பொழுதில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனால், இரவுப் பொழுதினை ஒளியூட்டுவதற்காக வீதி விளக்குகள் போதியளவில் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையும் இங்கு காணப்படுகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் என்ற அச்சம் காணப்படுகிக்னறது. எனவே, சமூக நலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

- பாறுக் ஷிஹான்

# கிறிஸ்மஸ் இறை வருகையின் பேரானந்தம்

உலகம் முழுவதும் இன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் களைக்கட்டியுள்ளது. கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் 24 முதலே அனைத்துத் தேவாலயங்களில் பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் ஆரம்பமாகியுள்ளது.

இயேசு கிறிஸ்வின் பிறந்த தினத்தைக் கிறிஸ்மஸ் என்று கூறப்படுகின்றது. ஆனால், இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்மஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது. கிறிஸ்மஸ் என்ற வார்த்தை 'கிறிஸ்ட் மாஸ்' என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாகத் தெரியவில்லை என்பதால், கிமு 7க்கும் கிமு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசெம்பர் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாகக் கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த மேற்கத்தியக் கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து, ஜனவரி 6ஆம் திகதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.

## புதிய பணிகள் தொடக்கம்

எப்படி இருப்பினும் கிறிஸ்மஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்தவர்கள் விசேஷமாகக் கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். கிபி 800ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராகப் பதவியேற்றான். அதன்பிறகு கிபி 855ஆம் ஆண்டு இட்முண்ட் என்ற தியாகி மன்னராக மூடி சூட்டப்பட்டான். கடந்த 1066ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் 1 மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் 2 கிறிஸ்மஸ் பண்டிகையை மிக விமர்சிக்கக் கொண்டாடினார்.

கடந்த 1643ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்துமஸ் தீவு" என்று பெயரிடப் பட்டது. இப்படி கிறிஸ்மஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர்



உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது.

## பரிசுப் பொருட்கள் பரிமாற்றம்; கரோல்

கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளப் பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதும், போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ஆம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் ஆரம்பமானது. கடந்த 1836ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதன்முதலாகக் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் துவங்கியது. கிறிஸ்மஸ் பண்டிகையின்போது, கிறிஸ்தவர்கள் குழுக்களாகச் சேர்ந்து கரோல் என்ற இசை நிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

இந்த கரோல் நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும், அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளைக் கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம். கடந்த 1847ஆம் ஆண்டு பிரான்சில் தான் முதல் முதலாகக் கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கரோலில் 'ஓ ஹோலி நைட்' என்ற பிரபல கிறிஸ்மஸ் பாடல் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வரலாற்றில் சில சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெற்று உள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும், பாபிலோனியர்களும் கிறிஸ்மஸ் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாகக் கொண்டாடி வந்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும். மேலும் சிலர் தங்கள் அடிமைகளைப் பரிசாகப் பரிமாறிக் கொண்டனர். சில எஜமான்கள் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மட்டும், அடிமைகளுக்கு வீட்டில் முழு சுதந்திரம் கொடுத்ததாகவும் வரலாற்றில் குறிப்புகள் உள்ளது. பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்குப் பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் உள்ளிட்டவற்றுக்கு அதிகமாகப் பயந்தனர். வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்குத் தீமை விளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்குப் பிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடி வந்துள்ளனர். மொத்தத்தில் நல்லது ஓங்கவும், அல்லது அழியவும் இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இயேசு பெருமானை இறைஞ்சி, துதி பாடி மகிழ்கின்றனர் என்பது சந்தோஷமான விடயமாக கருதப்படுகின்றது.



# கிறிஸ்மஸ் சுவாரஸ்ய தகவல்கள்



Sh கிறிஸ்துமஸ் சில சுவாரஸ்ய தகவல்கள்

## மின்விளக்கு மரம்

கிறிஸ்துமஸ் மரம் சொர்க்க வாழ்க்கையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. கிறிஸ்மஸ் மரத்தை வைக்கும் பாரம்பரியம் முதலில் ஜேர்மனியில் தொடங்கியது என்று நம்பப்படுகிறது, அதன் பிறகு அது 1830களில் இங்கிலாந்துக்கு வந்தது. குளிர்காலத்தில் இயேசு கிறிஸ்து பிறந்த பிறகு, சில மரங்கள் பனியை அசைத்து பச்சை நிறமாக மாறியது என்று புராணக்கதை கூறுகிறது. எனவே, கிறிஸ்மஸ் மரம் நிரந்தரத்தையும் அழியாமையையும் குறிக்கிறது.

அத்துடன், 1882இல் முதன் முறையாக கிறிஸ்மஸ் மின்விளக்கு மரம் பயன்படுத்தப்பட்டது. நியூயோர்க்கில் மின்சாரம் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசனின் நண்பர் ஒருவர் 80 பல்புகளை வைத்து மரத்தை அழகுபடுத்தினார். பின்பு 1903இல் வியாபார ரீதியாக கிறிஸ்மஸ் மின்விளக்கு மரங்கள் விற்பனைக்கு வந்தன. இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் பிரிட்டனில், தேவதை வடிவிலான மின்விளக்குகள் கிறிஸ்மஸின்போது அதிகமாக விற்கப்பட்டன.

## கிறிஸ்துமஸ் தீவு

இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு தீவிற்கு கிறிஸ்மஸ் தீவு என்று பெயர். வில்லியம் மைனர் என்ற பிரிட்டிஷ் மாலுமி 1643ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் என்று இத்தீவை கண்டுபிடித்தமையால் இப்பெயர்.

## இலை இல்லாத மரம்



சுவீடன் நாட்டில் மக்கள் கிறிஸ்மஸ் மரங்களை நடும்போது பச்சை இலைகளைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அந்நாட்டில் யாராவது இறந்து போனால் பச்சை மரங்களைச் சமாதி அருகில் நடுவது உண்டு. இறப்பின் சின்னமாகப் பச்சை மரம் இருப்பதால் கிறிஸ்மஸ் மரங்களுக்கு முழுக்க முழுக்க பூக்களையே பயன்படுத்தி அலங்கரிக்கிறார்கள்.

## கிறிஸ்துமஸ் குடில்

இயேசுநாதர் பிறந்ததைப்போல சித்திரிக்கும் கிறிஸ்மஸ் குடில்கள் விதவிதமான அலங்காரங்களுடன் உலகெங்கும் அமைக்கப்படுகின்றன. இதை முதன்முதலாகப் புனித பிரான்சிஸ் என்பவர் 1722ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்

## முதல் வாழ்த்து அட்டை

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஹென்றி என்ற தொழிலதிபர் இந்த அட்டையை உருவாக்கிய பெருமை பெறுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த இவர், கிறிஸ்மஸ் சமயத்தில் உறவினர்களுக்குக் கடிதம் எழுத இயலாததால் அட்டையில் படத்தை அச்சிட்டு வாழ்த்தாக அனுப்பினர். ஆயிரம் பேருக்கு அவர் வாழ்த்து அட்டை அனுப்பினார்.

அதன்பிறகு கிறிஸ்மஸ் சமயத்தில் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. ஹென்றி அனுப்பிய ஆயிரம் வாழ்த்து அட்டைகளை இப்போதும் ஒருவர் லண்டனில் தன் வசம் வைத்துள்ளார்.

## கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் தாத்தாவிடம் இருந்து பரிசுகளைப் பெறப் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஊக்குவிக்கிறார்கள். நல்ல குழந்தைகளாக இருந்தால் தான், கிறிஸ்மஸ் தாத்தாவிடம் இருந்து பரிசுகளைப் பெறுவார்கள் என்றும் கூறுவார்கள். உண்மையில் கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் யார்? இவரைப் பற்றிய வரலாறு என்ன?

புராணக்கதைகளின்படி, கிறிஸ்மஸ் தாத்தா ஆண்டு முழுவதும் குழந்தைகளுக்கான பொம்மைகளை உருவாக்கும் ஒரு ஆனந்தமான நபராகக் கருதப்படுகிறார். முதலில் இவர் குழந்தைகளிடமிருந்து அவர்களுக்குப் பிடித்த பரிசுகளைக் கோரி கடிதங்களைப் பெறுவார் என்று கூறப்படுகிறது. இவர் வட துருவத்தில் வசிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

வெள்ளை தாடி, மகிழ்ச்சியான மனிதரின் கதை துருக்கியில் கி.பி 280இல் ஆரம்பிக்கின்றது. செயிண்ட் நிக்கோலஸ் என்ற துறவி ஏழைகளுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உதவுவதற்காகப் பல நன்மைகளைச் செய்வார் என்று தெரிகிறது. இந்த துறவி தனது முழு செல்வத்தையும் ஏழைகளுக்கு உதவப் பயன்படுத்தி உள்ளார். பின்னாளில் இந்த துறவி குழந்தைகள் மற்றும் மாலுமிகளின் பாதுகாவலராக மாறினார் என்று சில புராணங்கள் கூறுகிறது. எது எப்படியோ, கிறிஸ்மஸ் தாத்தா என்பவர் இல்லாதவர்களுக்கு உதவக் கூடிய ஒரு நல்ல மனம்கொண்ட மனிதராக உள்ளார் என்பதை நாமும் கிறிஸ்துமஸ் அன்று ஏழை எளியவர்களுக்கு உதவி இந்த 2024 கிறிஸ்துமஸை இனிமையாக கொண்டாடலாம்.





## இரண்டாம் நாள்...

ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து வருடாந்தம் நடத்தும் விசேட கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சி ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் திங்கட்கிழமை (23) இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது.

இந்த கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசை நிகழ்ச்சி டிசெம்பர் 25ஆம் திகதி வரை தினமும் இரவு 7.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெறும்.

## கரோல் இசை நிகழ்ச்சி

ஊவா மாகாண கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் இசை நிகழ்ச்சி திங்கட்கிழமை(23) ஊவா மாகாண சபை அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஊவா மாகாண ஆளுநரின் சட்டத்தரணி ஜே.எம்.கபில ஜயசேகர, கலாசார அலுவல்கள் செயலாளர் நிஹால் குணரத்ன, ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம ஆகியோர் கலந்துகொண்டனர்.

- சுமணசிறி குணதிலக்க





## கரோல் கீதம் நிகழ்வு

செயின்ட் மார்க்ஸ் தேவாலயத்தில் 179ஆவது ஆண்டு கிறிஸ்மஸ் கரோல் கீதம் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

- பாலித ஆரியவங்ச



## "உண்மையின் தரிசனம்"

காவேரி கலா மன்றத்தின் தயாரிப்பில் உண்மையின் தரிசனம் நாட்டுக்கூத்து நிகழ்ச்சி திங்கட்கிழமை(23) மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது.

காவேரி கலா மன்றம் கிறிஸ்து பிறப்பு நிகழ்வைப் பண்பாட்டு விழுமியங்களோடு இணைத்து கூத்து வடிவத்தில் கடந்த 26 வருடங்களாகக் காவேரி கலாம் மன்றம் வருடம் தோறும் நடத்தி வருகிறது.

அந்த வகையில் இந்த வருடம் உண்மையும் தரிசனம் யாழ்ப்பாணத்தில் மேசியா பூரண சுவிசேஷ சபை என்ற தேவாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

-பு.கஜிந்தன்





## வாரி வழங்கிய தேசபந்து மா.செல்வராசா

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் வளர்ச்சியைக் காண வேண்டும் எனும் நோக்கில் பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் பிரபல தொழிலதிபரும் சமூக சேவையாளருமான தேசபந்து மா.செல்வராசா மூன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொகையை வாரி வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள பிரபல பாடசாலையான மெதடிஸ்த மத்திய மிஷன் உயர் தர பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (22) இடம் பெற்ற பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வின் போதே மூன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொகையைத் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்காக நான்கு வருடத்திற்கான உதவித் தொகையாக மாதாந்தம் தலா 7,000 ரூபாய் வீதம் நான்கு வருடங்களுக்கு 3,360,000 ரூபாயினையும், அதற்கு மேலதிக பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ள 14 மாணவர்களுக்கு அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் போது தமக்குத் தேவையான ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக 5,000 பெறுமதியான வவுச்சர்களையும் வழங்கி வைத்துள்ளார்.

## நுளம்பு வலை விநியோகம்

காரைதீவில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நுளம்பு வலைகள் அனைத்துலகத் தமிழர் பேரவையினால் விநியோகம் செய்த நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜி.அருணன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா





## மனதில் உறுதி வேண்டும்

மகாகவி பாரதியின் நினைவாக திருகோணமலை அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மனதில் உறுதி வேண்டும்' இலக்கிய நிகழ்வு, தி/தி/ புனித வளனார் தமிழ் வித்தியாலயத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்களின் பேச்சு,இளங்கலைஞர்களின் பாடல், எழுத்தாளர்களின் பேச்சு மற்றும் 'கவியரங்கம்' ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.



இஸ்ரேல்

## ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொலையை

# ஒப்புக்கொண்டது இஸ்ரேல்



ஜூலை மாதம், ஈரானில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை கொலை செய்துள்ளதை இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சரான இஸ்ரேல் காட்ஸ், முதன்முறையாக பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

இது குறித்து பேசிய அவர்,

“நாங்கள் ஹமாஸை தோற்கடித்து விட்டோம். ஹிஸ்புல்லாவை தோற்கடித்தோம், ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளைக் கண்மூடித்தனமாக அழித்துவிட்டோம்.

“உற்பத்தி முறைகள், சிரியாவில் அசாத் ஆட்சியை வீழ்த்திவிட்டோம், தீமையின் அச்சுக்கு கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளோம். மேலும், கடுமையான தாக்குதலை எதிர்கொண்டு ஏமனில் உள்ள ஹவுதி அமைப்பு, கடைசியாக நிற்கிறது” என்று காட்ஸ் கூறினார்.

மேலும், “இஸ்ரேல், அவர்களின் மூலோபாய உட்கட்டமைப்பை சேதப்படுத்தும், நாங்கள் அவர்களின் தலைவர்களின் தலையைத் துண்டிப்போம், நாங்கள் தெஹ்ரான், காசா மற்றும் லெபனானில் உள்ள ஹனியே, சின்வார் மற்றும் நசரெல்லாவுக்கு செய்தது போல் நாங்கள் அதை ஹொடைடா மற்றும் சனாவிலும் செய்வோம்” என் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## ஓடும் ரயிலில்

# தீயிட்டு பெண் கொலை



ஓடும் ரயிலில், பெண் ஒருவரை இளைஞன் ஒருவர் தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் ஒன்று அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணம், புரூக்ளின் நகரை நோக்கி சென்று கொண்டிருந்த ரயில், மன்ஹாட்டன் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது, அந்த ரயிலில் பெண் ஒருவர் உறங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்குச் சென்ற இளைஞன், அந்தப் பெண்ணின் ஆடையில் தீ வைத்துள்ளார். இதனால் அவர் அலறி துடித்துள்ளார். ஆனால், அவர் உயிரிழக்கும் வரை குறித்த இளைஞன் நின்று இரசித்துக் கொண்டிருந்தார்.

பின்னர் மன்ஹாட்டன் ரயில் நிலையத்தில் இறங்கிய குறித்த இளைஞன், சாதாரணமாக நடந்து சென்றார்.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸா, குறித்த இளைஞனை மடக்கி பிடித்து கைது செய்தனர்.

பங்களாதேஷ்

## ஹசீனாவை திருப்பி அனுப்புமாறு

# இந்தியாவிடம் கோரிக்கை

வழக்குகளை எதிர்கொள்வதற்காக பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை பங்காளதேசஷுக்கு திருப்பி அனுப்புமாறு இந்தியாவுக்கு, பங்காளதேஷ் இடைக்கால அரசு, செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பங்காளதேஷில் 16 ஆண்டுகளாக பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதனால் ஷேக் ஹசீனா பங்காளதேஷை விட்டு வெளியேறி, இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவரது அரசு கவிழ்க்கப்பட்டது.


அதே சமயத்தில், முகமது யூனுஸ் தலைமையில் பங்காளதேஷில் இடைக்கால அரசு பதவியேற்றது. ஷேக் ஹசீனா, அவருடைய அமைச்சர்கள், ஆலோசகர்கள், இராணுவ, சிவில் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக பல்வேறு குற்றவியல் வழக்குகளும், இனப்படுகொலை குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது. இந்த வழக்குகளில் ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு எதிராக டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதற்கிடையே, வழக்குகளை எதிர்கொள்ள ஷேக் ஹசீனாவை இந்தியாவிலிருந்து வரவழைக்க ஏற்பாடு செய்யுமாறு பங்காளதேஷ் வெளியுறவு அமைச்சகத்துக்கு உள்துறை அமைச்சு கடிதம் எழுதியுள்ளது. இதற்கமைய, பங்காளதேஷ் இடைக்கால அரசு, வழக்குகளைச் சந்திக்க ஷேக் ஹசீனாவை வங்காளதேஷுக்கு திருப்பி அனுப்புமாறு இந்தியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அயோத்தி

## அயோத்தி ராமர் கோவிலின்

# முதலாம் ஆண்டு விழா



அயோத்தி ராமர் கோவிலின் முதலாம் ஆண்டு விழாவை, ஜனவரி 11 முதல் 3 நாட்கள் கொண்டாட ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் பிரம்மாண்ட ராமர் கோவில் கட்டப்பட்டு வருகிறது. இதனைப் பக்தர்களின் வழிபாட்டுக்குத் திறக்கும் வகையில் இந்த ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் பிராண பிரதிஷ்டை விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிலையில், ஜனவரியில் சுக்ல பட்ச துவாதசி திதி 11ஆம் திகதி வருகிறது. இதனை முன்னிட்டு, கோவிலின் முதலாம் ஆண்டு விழாவை ஜனவரி 11ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு கொண்டாட, கோவிலை நிர்வகித்து வரும் ஸ்ரீராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது.

இந்த 3 நாட்கள் விழா ‘பிரதிஷ்டா துவாதசி’ என அழைக்கப்படவுள்ளது.

இதுகுறித்து அறக்கட்டளை உறுப்பினர் ஒருவர் கூறுகையில்,

“கோவிலின் பிராண பிரதிஷ்டை விழாவுக்கு அழைக்கப்படாத அல்லது பங்கேற்க முடியாத சாதுக்களை இந்த மூன்று நாள் விழாவுக்கு அழைக்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பொறுப்பை தர்மாச்சார்யா சம்பர்க் பிரமுக் அஷோக் திவாரியிடம் ஒப்படைத்துள்ளோம்” என்றார்.

இந்த முதலாம் ஆண்டு விழாவை முன்னிட்டு, ராமர் கோவில் வளாகத்தில் 5 இடங்களில் நிகழ்ச்சிகள் மற்றும் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் யாகசாலை பூஜைகளும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான்

# ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுமி

ராஜஸ்தான் மாநிலத்தில் திங்கட்கிழமை(23) அன்று விளையாடிக் கொண்டிருந்த சிறுமி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், கோட்பூட்லி நகர் அருகே சரூந்த் கிராமத்தில் உள்ள விவசாய நிலத்துக்கு அருகே சுமார் 150 அடி ஆழத்தில் ஆழ்துளைக் கிணறு ஒன்று பாசனத்திற்காகத் தோண்டப்பட்டது. தொடர்ந்து நீர் ஊராத நிலையிலும், அந்த ஆழ்துளைக் கிணறு மூடப்படாமல் திறந்து கிடந்துள்ளது.

இந்தநிலையில், அங்கு விளையாடிக் கொண்டிருந்த 3 வயதுடைய சிறுமி எதிர்பாரா விதமாக ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுமியை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## நாளை ஆரம்பமாகின்றது நான்காவது டெஸ்ட்:



# அவுஸ்திரேலியாவை வெல்லுமா இந்தியா?

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியானது மெல்பேணில் நாளை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில், மூன்றாவது போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது.

அந்தவகையில், எஞ்சியிருக்கின்ற இரண்டு போட்டிகளிலும் வென்றாலே சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்தியா நேரடியாகத் தகுதி பெற முடியுமென்ற நிலையில் இப்போட்டி முக்கியத்துவம் பெறுகின்றது.

கடந்த போட்டியில் காயமடைந்த ஜொஷ் ஹேசில்வூட்டுக்குப் பதிலாக அவுஸ்திரேலிய அணியில் ஸ்கொட் போலண்ட் களமிறங்குவாதோடு, நாதன் மக்ஸீவினிக்குப் பதிலாக சாம் கொன்ஸ்டாஸ் அறிமுகத்தை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ட்ரெவிஸ் ஹெட் உபாதைக்குள்ளாகியபோதும் அவர் குணமடைந்து விடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக இந்திய அணியில் மொஹமட் சிராஜ்ஜுக்குப் பதிலாக பிரசீத் கிருஷ்ணா விளையாடக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இதேவேளை, அணித்தலைவர் றோஹித் ஷர்மா மற்றும் விராட் கோலி ஆகியோர் ஓட்டங்களைப் பெற வேண்டிய அழுத்தத்தில் உள்ளதோடு, யஷஸ்வி ஜைஸ்வாலும் பொறுப்புணர்ந்து விளையாட வேண்டியுள்ளார்.

மெல்பேண் ஆடுகளமானது வேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாகவே காணப்படுமென நம்பப்படுகின்றது.

## அவுஸ்திரேலியாவுக்கெதிரான இறுதி இரண்டு டெஸ்ட்களிலும்

# ஷமி விளையாட வாய்ப்பில்லை



இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஷமியின் இடது முழங்காலில் வீக்கம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட வாய்ப்பில்லாமல் போயுள்ளது.

இறுதியாக சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலேயே விளையாடிய பின்னர் தற்போதே ஷமி மீண்டும் விளையாடத் தொடங்கியுள்ள நிலையில் நீண்ட காலத்தின் பின்னர் விளையாடியமையால் இந்நிலை ஏற்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

## அஷ்வினின் பிரதியீடாக

# இந்திய குழாமில்

தனுஷ் கொட்டியன் அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான நான்காம், ஐந்தாம் போட்டிகளுக்கான இந்திய குழாமில் இரவிச்சந்திரன் அஷ்வினின் பிரதியீடாக மும்பையின் சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரர் தனுஷ் கொட்டியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

26 வயதான கொட்டியன் 33 முதற்தரப் போட்டிகளில் 101 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன், 41.21 என்ற சராசரியில் 1,525 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

## பின் தொடை தசைநார் கிழிவு:

# மூன்று மாதங்களுக்கு ஸ்டோக்ஸ் இல்லை



பின் தொடை தசைநார் கிழிவொன்றுக்கு இங்கிலாந்தின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸுக்கு சத்திர சிகிச்சை தேவைப்படுவதுடன், குறைந்தது மூன்று மாதங்களுக்கு எவ்விதக் கிரிக்கெட்டும் விளையாட முடியாமல் போயுள்ளது.

நியூசிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் பந்துவீசும்போதே 33 வயதான ஸ்டோக்ஸ் காயமடைந்திருந்தார். இவ்வாண்டு ஓகஸ்ட் மாதத்திலும் இதே காயம் ஸ்டோக்ஸுக்கு ஏற்பட்டிருந்தது.

அடுத்த மாதம் ஸ்டோக்ஸுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.



## நியூசிலாந்துக்கெதிரான

# இலங்கை குழாமில் மலிங்க

நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கை குழாமில் வேகப்பந்துவீச்சாளர் எஷான் மலிங்க இடம்பெற்றுள்ளார். இலங்கை குழாமொன்றில் மலிங்க இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

தவிர லஹிரு குமார, நுவனிடு பெர்ணாண்டோ ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ள நிலையில் இறுதியாக இலங்கை விளையாடிய ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரான நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த டில்ஷான் மதுஷங்க, சதீர சமரவிக்கிரம ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்:

சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, அவிஷ்க பெர்ணாண்டோ, நிஷான் மதுஷ்க, குசல் மென்டிஸ், கமிந்து மென்டிஸ், ஜனித் லியனகே, நுவனிது பெர்ணாண்டோ, டுனித் வெல்லலாகே, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, சமிந்து விக்ரமசிங்க, அசித பெர்ணாண்டோ, மொஹமட் ஷிராஸ், லஹிரு குமார, எஷான் மலிங்க.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 25, நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.